டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 22.01.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 177 - Madurai | Online Edition

# வேளாண் ஏற்றுமதியை அதிகரிக்க இயற்கை வேளாண்மை மாநாடு

புது தில்லி, ஜன.21

மத்திய தொழில், வர்த்தக அமைச்சகத்தின் கீழ் இயங்கும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், அசாம் அரசுடன் இணைந்து இயற்கை வேளாண்மை மாநாடு மற்றும் வாங்குவோர், விற்போர் சந்திப்பை குவஹாத்தியில் நடத்தியது.

இந்த நிகழ்வு வேளாண் – ஏற்றுமதி இணைப்புகளை வலுப் படுத்துவதையும் அசாமின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கான சந்தை அணுகலை மேம்படுத்து வதையும் நோக்கமாகக் கொண்டது.

இந்த மாநாட்டில் அசாமில் இருந்து 30–க்கும் அதிகமான ஏற்றுமதியாளர்கள், 9 இறக்குமதியாளர்களுடன் சுமார் 50 விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்களும் பங்கேற்றன. வாங்கு வோர் விற்போர் சந்திப்பு வணிகத் தொடர்புகளுக்குக் கட்டமைக் கப்பட்ட தளத்தை வழங்கியது. இது பங்கேற்பாளர்களின் வர்த்தக வாய்ப்பு களை ஆராயவும், உள்நாட்டு மற்றும் சர்வதேச வாங்குபவர் களுடன் நீண்டகாலக் கூட்டாண்மைகளை ஏற்படுத்தவும் உதவியது.

அசாம், தனது வளமான வேளாண்மை–பருவநிலை பன்முகத் தன்மையுடன், ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள ஏராளமான பொருட் களை உற்பத்தி செய்கிறது. அசாம் ஜோஹா அரிசி மற்றும் பாசுமதி அல்லாத பல்வேறு சிறப்பு அரிசி வகைகளுக்கும் கூடுதலாக, வாழைப்பழம், அன்னாசி, மாண்டரின் ஆரஞ்சு, அசாம் எலுமிச்சை, இஞ்சி, மஞ்சள், கருப்பு மிளகு போன்ற பழங்கள் மற்றும் காய்கறிகளும், பல்வேறு தோட்டக்கலை மற்றும் பிற இயற்கை வேளாண் பொருட்களும், உலகளாவிய வேளாண் சந்தைகளில் மாநிலத்தின் இருப்பை விரிவுபடுத்த வலுவான வாய்ப்புகளை வழங்குகின்றன.

அசாம் மாநில வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கலால் துறை அமைச்சர் அதுல் போரா, வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத் தலைவர் அபிசேக் தேவ், அசாம் மாநில வேளாண் உற்பத்தி ஆணையர் அருணா ரஜோரியா, அசாம் வேளாண் துறை இயக்குநர் உதய் பிரவீன் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# மதுரை விதைப்பரிசோதனை நிலையத்திற்கு தேசிய தரச்சான்று

மதுரை, ஜன.21

தமிழ்நாடு விதைசான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறை சார்பில் மதுரை, நாகமலைப் புதுக்கோட்டையில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையம் மூலம் இந்த மாவட்டத்தில் பயிரிடப்படும் நெல், பயறு வகைகள், எள், நிலக்கடலை, பருத்தி, மக்காச்சோளம் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் விதைகள் பரிசோதனை செய்யப்படுகிறது. இங்கு விதைகளின் முளைப்புத் திறன், புறத்தூய்மை. ஈரப்பதம், பிற இரகக்கலவன் ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு விதைகளின் தரம் உறுதி செய்யப்படுகிறது. இந்த பரிசோதனை நிலையத்தில் நடப்பாண்டில் இதுவரை 3059 விதை மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றில் 191 விதை மாதிரிகள் தரமற்றவை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இங்கு பல்வேறு விதமான ஆய்வுகளுக்குப் பிறகு விதைப் பரிசோதனை முறைகள் உறுதி செய்யப்பட்டு ஆய்வகச் சோதனை மற்றும் அளவு திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் தரச்சான்று (ஹியுடீடு ஊநசவைகைஷ்உயவந) பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்கு பரிசோதனை செய்யப்படும் விதைகளுக்கு இந்தியாவில் மட்டுமின்றி உலக அளவில் விற்பனை பிரதிநிதித்துவம் கிடைக்கிறது.

எனவே விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தங்களிடமுள்ள விதைகளை விதைப்பரிசோதனை கட்டணம் ரூ.80/- மட்டும் செலுத்தி விதை தரத்தினை அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் தரமான விதைகளைப் பயன்படுத்தி நிறைந்த மகசூலைப் பெறலாம் என விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண் அலுவலர்கள் பெரி.இராமலெட்சுமி மற்றும் சி.கமலாராணி தெரிவித்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தளிர்கீரைகள் வளர்ப்பு – மதிப்புகூட்டல் பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் காய்கறி அறிவியல் துறையின் சார்பாக வரும் 5.2.26 அன்று தளிர்கீரைகள் வளர்ப்பு மற்றும் மதிப்புகூட்டல் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது.

மனித உடல்நலத்திற்கு தேவையான பெருமளவு சத்துத் தேவையை தளிர்கீரைகள் நிறைவு செய்கின்றன. தளிர்கீரைகளிலிருந்து பெறப் படும் மதிப்பு கூட்டப்பபட்ட பொருட்கள் ஊட்டச்சத்து நிறைந்தவை யாகவும் உடல் நலத்தை மேம்படுத்துவதாகவும் உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு தளிர்கீரைகள் சாகுபடி மற்றும் மதிப்புகூட்டல் குறித்த திறன் பயிற்சி தொழில்முனைவோருக்கு வழங்கப்படுகிறது. கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

- செயல்முறை சாகுபடித் திறன்கள்
- உணவுப் பாதுகாப்பு வழிமுறைகள்
- ஊட்டச்சத்து நன்மைகள்
- வணிகத்துக்கு வழிகாட்டல்
- நீடித்த வருவாய்
- மதிப்பு கூட்டல்
- தரநிலை நிறுத்தம்
- சந்தை வாய்ப்புகள்

ஒரு நாள் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் பயிற்சிக் கட்டணமாக ரூ.2,000/– (சரக்கு மற்றும் சேவை வரி 18 விழுக்காடு உள்பட) செலுத்த வேண்டும்.

பயிற்சியானது கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், காய்கறி அறிவியல் துறையில் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண் 07 (தாவரவியல் பூங்கா), மருதமலை சாலை, (காந்திபுரத்திலிருந்து 1A, 1B, ID, 70,76, 64ம்) (தொடர் வண்டி நிலையத்திருந்து, சிங்காநல்லூரில் இருந்து 1C) வைத்து நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறி அறிவியல் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர் – 641003. மின்னஞ்சல் : vegetables@tnau.ac.in, கைபேசி : 89036 94612, திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 9.00 முதல் மாலை 5.00 வரை) தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மிக நீண்ட இலை பருத்திக்கான சிறப்பு பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.21

கோவை வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் இணைந்து நடத்தும் பருத்திக்கான சிறப்பு திட்டத்தில் மிக நீண்ட இலை பருத்திக்கான பயிற்சி கிணத்துக்கடவு வட்டாரத்தில் உள்ள வடபுதூர் கிராமத்தில் நடந்தது.



இந்த பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில் நுட்ப வல்லுனர் சுரேஷ்குமார் வந்திருந்த அனைத்து விவசாயி களையும் வரவேற்று மிக நீண்ட இலை பருத்திக்கான முக்கியத் துவத்தை பற்றி எடுத்துக் கூறினார். மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வந்திருந்த முனைவர் சங்கரநாராயணன், மிக நீண்ட இலை பருத்தி கோவை மாவட்டத்தில் மதுக்கரை மற்றும் கிணத்துக்கடவு ஆகிய வட்டாரங்களில் பரவலாக பயிரிடப் பட்டு வருகிறது. இந்தப் பருத்தியில் நீர், களை மற்றும் உர மேலாண்மையின் முக்கியத்துவத்தை பற்றி கூறினார். மேலும் இதில் அதிக லாபமும் ஈட்ட முடியும் என்று விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் இப்பகுதி விவசாயிகளுக்கு அடர் நடவு முறை பற்றியும் இயந்திர நடவு முறை பற்றியும் விளக்கமாக கூறினார்.

வேளாண் அறிவியல் நிலையத்தின் இளம் வல்லுனர் துரைசாமி, பருத்தி சந்தைப்படுத்துதல் பற்றி விளக்கினார். இப்பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இறுதியாக இளம் வல்லுனர் சிந்துஜா நன்றியுரை கூறினார்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# நில உடமை பதிவு செய்ய அறிவுறுத்தல்

விழுப்புரம், ஜன.21

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குநர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், பாரதப் பிரதமரின் விவசாயிகளுக்கான கவுரவ நிதி உதவி திட்டத்தின் (PMKISAN) கீழ் 22 ஆவது தவணை ஜனவரி மாதம் 26ஆம் தேதி விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இந்த தவணையில் வேளாண்மை துறையின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகளுக்கான நில உடைமை பதிவு செய்யாதவர்களுக்கு தவணை நிறுத்தம் செய்யப்பட உள்ளது.

எனவே இதுவரை நில உடமை பதிவு (Farmers Registration) செய்யாத விவசாயிகள் அனைவரும் பொது சேவை மையங்கள் அல்லது தங்கள் பகுதிகளுக்கான உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி உடனடியாக நில உடமை பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் கண்டமங்கலம் வட்டாரத்தில் பயிர் எண்மய கணக்கெடுப்பிற்கு (Digital Crop Survey) ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும், படித்த கைபேசி செயலி பதிவேற்றம் செய்ய தெரிந்த தன்னார்வலர்கள் பகுதி நேரத்தில் (Part time) பணி செய்ய வரவேற்கப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்



VASANTHAM Agri Tech

# வசந்தம் அக்ரிடெக்

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்



Sarathi i06



Yield max VT 260



Sirachi 8D6

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# தேங்காய் வயலில் கரிம முறையில் உப்பு பயன்பாட்டை ஆய்வு செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், ஜன.21

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் பகுதியில் உள்ள தேங்காய் பயிரிடும் வயலில் கரிம வேளாண்மை முறையில் 'உப்பு பயன்பாடு' (Salt Application) செயல்முறை குறித்து PGP வேளாண் கல்லூரி மாணவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

தேங்காய் மர வளர்ச்சியில் உப்பு வழங்கப்படும் பயன்கள், மண் சத்துச் சமநிலை மற்றும் விளைச்சல் உயர்வு குறித்து நிபுணர்கள் விளக்கமளித்தனர். உப்பு பயன்பாடு தேங்காய் மரத்தின் பொட்டாசியம் உறிஞ்சும் திறனை அதிகரிப்பதுடன், இலைப்பசுமை, காய் உருவாக்கம், நீர்ப்பிடிப்பு திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் என மாணவர்கள் குறிப்பிட்டனர்.

கரிம வேளாண்மை நுட்பங்களின் படி, ஒரு மரத்திற்கு வருடத்தில் இரு முறை 1–1.5 கிலோ அளவில் உப்பு வழங்குவது பரிந்துரைக்கப்பட்டது.

ஆய்வின்போது, மாணவர்கள் மண் ஈரப்பதம், இயற்கை உரங்களின் தாக்கம், பூச்சி–நோய் மேலாண்மை போன்ற விவரங்களை விவசாயிகளுடன் கலந்துரையாடினர். கரிம உப்பு பயன்பாடு மண் ஆரோக்கியத்தை பாதிக்காமல் விளைச்சலை அதிகரிக்கும் பாதுகாப்பான தொழில்நுட்பம் என நிபுணர்கள் தெரிவித்து விவசாயிகள் விழிப்புணர்வு பெறும் வகையில் விளக்கம் அளித்தனர்.

மல்லசமுத்திரம் விவசாயிகள் இந்தப் பயிர் மேலாண்மை முறையை நடைமுறையில் செயல்படுத்த ஆர்வமாக இருப்பதாக மாணவர்கள் தெரிவித்தனர். இந்த ஆய்வு நிகழ்வு கரிம வேளாண் நுட்பங்களை சமூகத்தில் பரப்பும் விதமாக பாராட்டப்பட்டது.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உரங்களை ஆதார் கார்டு கொண்டு விற்பனை செய்ய வேண்டும் / யூரியா உரத்தை அதிகபட்ச விலைக்கு மேல் விற்றால் விற்பனை உரிமம் ரத்து

## வேளாண்மை அதிகாரி அறிவுறுத்தல்



பெரம்பலூர், ஜன.21

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கண்ணனின் அறிவுரைபடி பெரம்பலூர் வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், பெரம்பலூர் வட்டாரத்தில் உரம் விற்பனை நிலையங்களை நேற்று திடீர் ஆய்வு செய்தார். அப்போது உரம் இருப்பு உரம் எப்பொழுது வந்தது, லாட் நம்பர் ஆய்வு செய்தார். உரங்களை எப்போதும் விவசாயிக்கு ஆதார் கார்டு மூலமாக பி ஓ எஸ் இயந்திரத்தின் மூலமே விற்பனை செய்ய வேண்டும், மூட்டையில் உள்ள விலையில் விற்பனை செய்ய வேண்டும். ஒரே உரங்கள் மூட்டையில் வெவ்வேறு விலையில் இருப்பை தனித்தனியாக வைத்திருந்து விவசாயி களிடம் மூட்டையில் உள்ள விலையில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார். உரங்களை விவசாயிகளின் நிலம் மற்றும் பயிருக்கு ஏற்ப அறிந்து உரங்களை விவசாயிகளுக்கு ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் எந்திரத்தின் மூலம் விற்பனை செய்ய வேண்டும். ஒரே விவசாயின் பெயரில் உரங்களை பட்டியலிட கூடாது. ஒரே விவசாயிக்கு அவரின் வயல் பயிருக்கு அதிகமாக உரங்களை விற்பனை செய்யக்கூடாது மற்றும் உரங்களின் மூட்டியில் உள்ள விலையிலேயே விற்பனை செய்ய வேண்டும் விவசாயிகள் உரிமைப் பெற்ற உர விற்பனை நிலையங்களில் மட்டுமே உரங்களை வாங்க வேண்டும் உரிமைப் பெறாத நபர்களிடம் போலியான உரங்களை வாங்கி ஏமாறக்கூடாது. ஆகவே இதுபோல் போலி உரங்களை விற்பனை செய்வதை கண்டால் உடனடியாக வேளாண்மை துறைக்கு தகவல் கொடுக்க வேண்டும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# விவசாயிகளின் பாதங்களை காக்கும் காலணி (செருப்பு) தெரியுமா?

சேற்று வயல், காடுகழனிகளில் நாள் தோறும் வெறுங்காலுடன் நடப்பதால் நூற்றுக்கணக்கான விவசாயிகளின் கால்களில் ஆழமான விரிசல்களை எற்படுத்துவது மட்டுமல்லாமல், பூஞ்சை தொற்று (FUNGUS) மற்றும் பாம்பு, தேள், விச சந்துகளின் கடிக்கும் ஆளாகவும் நேரிடுகிறது. இதற்கு சரியான பாதுகாப்பான காலணிகள் (செருப்பு) இது வரை சரியாக இருந்ததில்லை.



இதனை மனதில் வைத்து ஹைதாரபாத்தை சேர்ந்த ஒரு ஸ்டார்ட் அப் கம்பெனி (EARTH TUNES DESIGN) பிரத்தியேகமான முறையில் ஒரு காலணிகளை வடிவமைத்துள்ளனர்.



**காலணியின் சிறப்பம்சம்?**

1) இந்த காலணிகள் கைவினைஞர்களிடம் நேரடியாக பெறப்பட்ட உள்நாட்டு கம்பளியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

2) யார் என்ற பிராண்டு பெயரில் இந்த ஷு (செருப்பு) அறிமுகமாகி உள்ளது.

3) சாக்கஸ் இல்லாமல் கூட இதை அணியலாம். கெட்ட வாடை துர்நாற்றத்தை எதிர் கொள்கிறது.

4) நீர் எதிர்ப்பு திறன் கொண்டவை.

5) மழை காலத்தின் நனையாமல் பாதங்களை (கால்களை) பாதுகாக்கிறது.

6) நெசவு செயல்பாட்டின் போது புளிகர்னல் பேஸ்ட்டைப் பயன்படுத்துவதால் நீர் எதிர்ப்பு திறனை அதிகரிக்கிறது.

**இதை கண்டுபிடித்தவர்கள் யார் தெரியுமா?**

நேசனல் இன்ஸ்டிடியூட் ஆப் டிசைன் கல்லூரியை சேர்ந்த நகுல் லத்கர், வித்யாதர் மற்றும் சந்தோஷ் கோச்.

**எங்கு கிடைக்கும்?**

https.//www.earthenturned.in என்ற இணைய தள முகவரியில் கிடைக்கும்.

ஒரு ஜோடியை வாங்கு, ஒரு ஜோடியை கொடு' என்ற முயற்சி யால், 6 ஆயிரத்து மேற்பட்ட விவசாயிகளுக்கு பாதுகாப்பு காலணி வழங்குகிறது.

இது வானிலை நிலைமைகளுக்கு ஏற்ப 'மேஜிக் போர்வை களுக்கு பராம்பரியமாக பயன்படுத்தப்படுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நெல் தரிசில் உளுந்து சாகுபடி

## அதிக மகசூல் பெற விதைபரிசோதனை அவசியம்



திருச்சி, ஜன.21

இந்திய விவசாயத்தில் தானியங்களுக்கு அடுத்தப் படியாக புரதச்சத்துமிக்க பருப்பு வகைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நமது உடல் வளர்ச்சிக்கும் அறிவாற் றலுக்கும் புரதச்சத்து மிகவும் அவசியமானது. இத்தகைய புரதச்சத்து பயறு வகை பயிர்களில் தானிய பயிர்களை காட்டிலும் இரண்டு மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பயறுவகை பயிர்களின் உற்பத்தியை விரைவில் இரண்டு மடங்காக உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

உளுந்து குறுகிய கால பயிராக இருப்பதாலும், வளிமண்டல நைட்ரஜனை நிலைநிறுத்தி. மண்ணின் வளத்தை மேம்படுத்து வதாலும், அடுத்தப் பயிருக்குத் தேவையான உரச்செலவை குறைப்பதோடு அதிக விளைச்சல் தருவதால் இன்றைய சூழலில் உளுந்து பயிரிட பெரும்பாலான விவசாயப் பெருமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பயறுவகை பயிர்களில் அதிக மகசூல் பெற பருவத்தில் விதைப்பு செய்ய வேண்டியது அவசியம் ஆகும். அதாவது தை பட்டத்தில் விதைப்பு செய்தால் அதிக மகசூல் பெறலாம். ஜனவரி 15 முதல் பிப்ரவரி 15க்குள் விதைக்க வேண்டும். காலம் தாழ்த்தி விதைத்தால் மண்ணின் ஈரப்பதம் குறைவதுடன் பனி ஈரமும் இல்லாமல் பயிர்கள் வறட்சிக்கு உள்ளாகி விளைச்சல் பாதிக்கப்படும்.


திருச்சி மாவட்டத்தில் நடப்பு தைப் பட்டத்தில் சம்பா நெல் அறுவடைக்குப்பின் நெல் தரிசில் உளுந்து சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் இப்பயிர்களின் உற்பத்தியை பெருக்க தரமான விதைகளை பயன்படுத்துவதன் மூலம் சரியான அளவு பயிர் எண்ணிக்கையை பராமரித்து அதிக விளைச்சல் பெற வாய்ப்பு உள்ளது. தரமான விதைகளே அதிக விளைச்சலுக்கு

உத்திரவாதம் ஆகும். எனவே உளுந்து சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் தமிழ்நாடு விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறையினரால் சான்றளிக்கப்பட்டு, சான்றட்டை பொருத்திய விதைகளையே பயன்படுத்த வேண்டும். சான்று விதைகள் இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைகளின் தரப்படி உளுந்தின் முளைப்புத்திறன் 75%, ஈரப்பதம் 9% மற்றும் புறத்தூய்மை 98% உள்ளதாக இருக்கும்.

தங்களிடம் உள்ள விதைகளைக் கொண்டு உளுந்து சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் தங்களிடமுள்ள விதைகளை பரிசோதனை செய்து விதைப்பதினால் பயிர் இழப்பினை தடுக்கலாம். ஏனெனில் சேமித்து வைத்துள்ள விதைகளின் ஈரப்பதம் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நிலவும் கடும் பனிப்பொழிவின் காரணமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஈரப்பதம் அதிகரித்தால் விதையின் தரம் குறைந்து விடும். மேலும் பூச்சி மற்றும் பூஞ்சாண தாக்குதலுக்கு உள்ளாகி விதையின் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். எனவே விவசாயிகள் தங்களிடமுள்ள விதைகளை பரிசோதனை செய்து விதையின் முளைப்புத் திறன் அறிந்து விதைப்பதன் மூலமாக விதையின் அளவையும் சரியாக பயன்படுத்த முடியும்.

எனவே நடப்பு தைப் பட்டத்தில் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் அதிக மகசூல் பெற உளுந்தின் தரத்தை பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும் என திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ் தெரிவித்துள்ளார். விவசாயிகள் தாங்கள் வைத்துள்ள விதைக் குவியலில் இருந்து 100 கிராம் உளுந்து விதையை எடுத்து துணிபைகளில் இட்டு பயிர் இரகம் மற்றும் குவியல் எண் போன்ற விவரங்கள் கொண்ட சீட்டினை வைத்து விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் விதை பரிசோதனை நிலையம் ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு அலுவலக வளாகம், தரை தளம், புத்தூர் நான்கு ரோடு, திருச்சி –17 என்ற முகவரியில் அமைந்துள்ளது. ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/– பரிசோதனை கட்டணம் செலுத்த வேண்டும் என திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் இரா.புவனேஸ்வரி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மண்ணிற்கு உரமாகும் தக்கைப் பூண்டு



விவசாயம் செழிக்க மண்வளம் காக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஜி திலகவதி கூறியுள்ளார்.

பெரும்பாலும் இரசாயன உரங்களை நல்ல விளைச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதற்கு மாற்றாக தக்கை பூண்டை இயற்கையான பசுந்தால் உரமாக பயன்படுத்தலாம்.

தக்கைப் பூண்டினை நிலத்தில் பயிரிட்டு பூக்கும் பருவத்தில் மடக்கி உழுவதால் மண்வளம் பெருகி நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது என அச்செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**தக்கைப்பூண்டு சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மைகள்**

அனைத்து வகையான மண்ணில் வளரக்கூடிய தாவரம். பல ஆண்டுகளாக மண்வளத்தை மேம்படுத்தும் பசுந்தால் உரமாக பயன்படுகிறது. வறட்சி தாங்கி வளரும், எந்த தாவரமும் வளராத களர் மண்ணில் கூட சாதாரணமாக வளரும். மழை காலங்களில் இதன் வளர்ச்சி வெகு வேகமாக இருக்கும். ஏக்கருக்கு 20 கிலோ விதைகள் தேவை. 50 நாளில் கிட்டத்தட்ட ஐந்து அடி உயரம் வரை வளர்ந்து பூவிட்டு பிஞ்சு வர ஆரம்பிக்கும் சமயத்தில் மடக்கி உழ வேண்டும். அதற்கு மேல் தாமதித்தால் தண்டு நார் பிடித்து விடும். இதனால் இயந்திரம் கொண்டு உழும்போது துண்டாகாமல் சிக்கிக் கொள்ளும். இதையே 90 நாட்களுக்கு மேல் விட்டு வைத்தால் காய்கள் நன்கு முற்றி விதைகளை அறுவடை செய்யலாம்.



## மண்ணில் மடக்கி உழும் போது கிடைக்கும் நன்மைகள்

இப்பயிரில் உள்ள வேர் முடிச்சுகளில் உள்ள பாக்டீரியாக்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை மண்ணில் நிலை நிறுத்துகிறது. இதனால் மண்ணில் உள்ள தழைச்சத்து அதிகரித்து மண்வளம் மேம்படுகிறது. மேலும் தொடர்ந்து விதைப்பதால் களர் தன்மை முற்றிலும் மாறும். மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கும், மண்ணில் கரிமச்சத்து அதிகரிக்கும், மண்ணில் நீர் பிடிப்பு தன்மை அதிகரிக்கும். மண்ணில் நுண்ணுயிர்கள் வேகமாக பெருகும். மண்புழுக்கள் எண்ணிக்கையும் உடனே உயரும்.

வாலாஜா வட்டாரத்தில் மண்ணை வளமாக்கும் நோக்கத்துடன், முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் தக்கைப்பூண்டு 50% மானியத்தில் ஒரு ஏக்கருக்கு 20 கிலோ, வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தக்கைப்பூண்டு 20 கிலோவின் முழு விலை ரூ.2588/- ஆகும். அரசு மானியம் ரூ.1250/- ஆகும். விவசாயி பங்கு தொகை ரூ.1338 /- ஆகும்.

இத்தகைய நன்மை பயக்கும் பசுந்தால் பயிர்களை பயிரிட்டு உரமாக பயன்படுத்தி நெல் உள்ளிட்ட அனைத்து பயிர்களிலும் கூடுதல் மகசூலை பெற்று பயன் பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் ஜி.திலகவதி தெரிவித்தார்.

# லாபகரமான மருத்துவ காளான் கோர்டிசெப்ஸ் மிலிட்டாரிஸ் - டாக்டர் மோகனின் வளர்ப்பு பிரிவில் ஆய்வுப் பயணம்

திருச்சி, ஜன.21

உயர் மருத்துவ மதிப்பும் அதிக வருமானம் தரக்கூடிய வணிக வாய்ப்புகளும் கொண்ட கோர்டிசெப்ஸ் மிலிட்டாரிஸ் காளான் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், டாக்டர் மோகனின் கோர்டிசெப்ஸ் காளான் வளர்ப்பு பிரிவிற்கு ஆய்வுப் பயணம் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் ஆய்வுப்பயணம் மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் டாக்டர் மோகன் பேசுகையில், கோர்டிசெப்ஸ் மிலிட்டாரிஸ் என்பது உலகளவில் மிக உயர்ந்த மதிப்புடைய மருத்துவ காளானாக கருதப்படுவதாக தெரிவித்தார்.



இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதோடு, சோர்வு நீக்கம், சுவாச கோளாறுகள், இரத்த ஓட்ட மேம்பாடு, நீரிழிவு மற்றும் மன அழுத்த குறைப்பு போன்ற பல மருத்துவ பயன்களை கொண்டு உள்ளதாக விளக்கினார். இதன் காரணமாக மருந்து மற்றும் ஊட்டச்சத்து (Nutraceutical) துறைகளில் இதற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மேலும், குறைந்த இடத்தில், கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் வளர்க்கக் கூடிய இந்த காளான், குறுகிய காலத்தில் அதிக லாபம் தரக்கூடிய மிகவும் லாபகரமான சுயதொழில் வாய்ப்பாக உருவெடுத்துள்ளதாக அவர் கூறினார். சரியான தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் முறைகள் பின்பற்றப்பட்டால், இளைஞர்கள், பெண்கள் மற்றும் விவசாயிகள் அனைவருக்கும் நிலையான வருமானம் ஈட்ட முடியும் என்றார்.

இந்த பிரிவில் கோர்டிசெப்ஸ் காளானிலிருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட துணை தயாரிப்புகள் குறித்தும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. குறிப்பாக,கோர்டிசெப்ஸ் மசாலா தேநீர், மருத்துவ பொடி, கேப்சூல், சாறு (Extract), ஆரோக்கிய பானங்கள் போன்ற தயாரிப்புகள் சந்தையில் அதிக வரவேற்பைப் பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. இத்தகைய துணை தயாரிப்புகள் மூலம், மூலப் பொருளை விட பல மடங்கு அதிக லாபம் ஈட்ட முடியும் என்பதும் குறிப்பிடப்பட்டது.

ஆய்வுப் பயணத்தில் கலந்து கொண்டவர்கள், வளர்ப்பு அறைகள், ஆய்வக நடைமுறைகள், தூய்மை மேலாண்மை, உலர்த்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் முறைகளை நேரில் பார்வையிட்டு பயனடைந்தனர். இவ்வகை அறிவியல் அடிப்படையிலான காளான் வளர்ப்பு முயற்சிகள், நாட்டின் மருத்துவத் துறையையும் வேளாண் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் முக்கிய பங்காற்றும் என அனைவரும் கருத்து தெரிவித்தனர்.

இந்த ஆய்வுப் பயணம், கோர்டிசெப்ஸ் மிலிட்டாரிஸ் காளான் வளர்ப்பை ஒரு மருத்துவ சார்ந்த, லாபகரமான தொழிலாக மாற்றுவதற்கான புதிய நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளித்ததாக நிகழ்ச்சி நிறைவடைந்தது.

# விவசாயிகளுக்கான விழிப்புணர்வு பேரணி

தேனி, ஜன.21

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பாலார்பட்டி கிராமத்தில் உழவர் திருநாளை முன்னிட்டு விவசாயிகளுக்கான விழிப்புணர்வு பேரணி சிறப்பாக நடத்தப்பட்டது. இப்பேரணி, விவசாயத்தின் முக்கியத்துவம், இயற்கை வளங்களின் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் எதிர்கால விவசாய வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு குறித்து பொது மக்களுக்கும் விவசாயி களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது.







இந்த விழிப்புணர்வு பேரணி, மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் ஏஞ்சல், ஏஞ்சல் பிஜு, ஈஷிதா, கிரிஜா, கோகுல் மித்ரா, குருசங்கீதா, இம்ரானா, இந்துமதி மற்றும் இசை பாரதி ஆகியோர் இப்பேரணியில் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்தனர். மாணவிகள் விவசாயிகளுடன் நேரடியாக கலந்துரையாடி, விவசாய விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இப்பேரணியில் சுமார் 25 விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். அவர்கள் கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக பேரணியாகச் சென்று, விவசாயம் நாட்டின் உணவு பாதுகாப்பிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாக இருப்பதை பொது மக்களிடையே எடுத்துரைத்தனர்.

விவசாயிகள் தங்களின் அனுபவங்களையும், தற்போதைய சவால்களையும் பகிர்ந்து கொண்டது நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்தது. பேரணிக்காக மாணவிகள் பல்வேறு விழிப்புணர்வு விளக்கப் படங்களை தயார் செய்திருந்தனர். நீர் பாதுகாப்பு தொடர்பாக மழைநீர் சேகரிப்பு, நீர் சிக்கன பாசன முறைகள், நிலத்தடி நீர் பாதுகாப்பு போன்ற தகவல்கள் தெளிவாக விளக்கப்பட்டன. நீர்வள பாதுகாப்பு இன்றைய விவசாயத்தின் அடிப்படை தேவையாக இருப்பதை உணர்த்தும் வாசகங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன.

மேலும், விவசாயத்தில் இளைஞர்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. இளைஞர்கள் விவசாயத்திற்கு வந்தால் புதிய தொழில்நுட்பங்களும் நவீன சிந்தனைகளும் விவசாயத்தில் புகும் என்பதைக் கூறும் வாசகங்கள் இடம் பெற்றன. விவசாயம் இளம் தலைமுறைக்கும் ஒரு மரியாதைக்குரிய மற்றும் நிலைத்த தொழிலாக மாற வேண்டும் என்பதே இப்பேரணியின் முக்கிய நோக்கமாக அமைந்தது. அதேபோல், விவசாயிகளுக்காக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு விவசாயத் திட்டங்கள், மானிய உதவிகள், பயிர் காப்பீட்டு திட்டங்கள் மற்றும் இயற்கை வேளாண்மை ஊக்குவிப்பு திட்டங்கள் குறித்த தகவல்களும் விளக்கப்படங்களின் மூலம் எடுத்துரைக்கப் பட்டன. இதன் மூலம் அரசு திட்டங்களை முழுமையாகப் பயன்

படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு விவசாயிகள் மத்தியில் உருவாக்கப்பட்டது.

காலநிலை மாற்றம் விவசாயத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்தும் இப்பேரணியில் எடுத்துரைக்கப்பட்டது. மாறுபடும் மழை, அதிகரிக்கும் வெப்பநிலை, புதிய பூச்சி மற்றும் நோய்களின் தாக்கம் போன்றவை விவசாய உற்பத்தியை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. நிலைத்த மற்றும் சூழலுக்கு உகந்த வேளாண்மை நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது.

மொத்தத்தில், உழவர் திருநாளை முன்னிட்டு யூபுநிசி திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு பேரணி, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை அதிகரித்தது. மதுரை வேளாண்மை கல்லூரி மாணவிகள், விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் இணைந்து செயல்பட்ட இந்த நிகழ்ச்சி, கிராமப்புற வளர்ச்சிக்கும் விவசாய முன்னேற்றத்திற்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைந்தது.

# ITK Demonstration மற்றும் விதை நெல்லின் முக்கியத்துவம்



திருவள்ளூர், ஜன.21

திருவள்ளூர் மாவட்டம், சேலை கிராமத்தில் தொன்போஸ்கோ வேளாண்மை கல்லூரி மாணவிகள், கிராமப்புற அனுபவ திட்டத்தின்படி விழிப்புணர்வு முகாம் மற்றும் Demonstration – செய்முறை ஒத்திகை நடத்தியுள்ளனர். இந்த முகாம் காக்கலூர் Block ADA – வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் மற்றும் வேளாண்மை அலுவலர் சுகுனாவின் உதவியுடன் இந்த முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமில் 30 விவசாயிகள் கலந்து கொண்டு ITK எனப்படும் Indigenous Technical knowledge முறைபடி உருவாக்கப்பட்ட கரைசல்கள் பஞ்சகாவ்யா, தசகாவ்யா, மீன் அமிலம், அமிர்த கரைசல், மீன் எண்ணெய், தேமோர் கரைசல், 5 இலை கரைசல், 10 இலை கரைசல், பழ கரைகல், கற்பூர கரைசல், உள்ளிட்ட இயற்கை முறையில் – பூச்சி விரட்டி மற்றும் கிருமி நாசினிகள் செய்முறை மற்றும் மகசூல் அதிகரிக்கும் முறைகளை விவசாயி களுக்கு மாணவிகள் விளக்கினர்.

# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மூலம் கிராம மக்களுக்கு விழிப்புணர்வு அளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



விருதுநகர், ஜன.21

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டாரம், சத்திரப்பட்டி கிராமத்தில் வ.உ.சி வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மூலம் கிராம மக்களுக்கு விழிப்புணர்வு அளித்தனர். பி ஆர் ஏ என்பது ஒரு முறைமையாகும். இதில் கிராமப்புற மக்கள் தங்கள் வாழ்வியல் சூழல், தேவைகள், வளங்கள் மற்றும் பிரச்சனைகளை அடையாளம் கண்டு திட்டமிட்டு செயல்படுவதில் உதவி செய்கிறது.

இதனை இயக்க வரைபடம் (Mobility map). பிரச்சனை மரம் (Problem tree). தற்காலிக வரலாறு (Time-line). வட்ட விளக்கப்படம் (Pie chart), தரவரிசை முறை (Ranking method), சமுதாய வரைபடம் (Social map), வளங்கள் வரைபடம் (Resource map), தினசரி வேலைகள் (Daily routine). நடைபயண வரைபடம் (Transact walk), பருவ கால வரைபடம் (Seasonal map) மற்றும் சப்பாத்தி விளக்கப் படம் (Impact diagram) மூலம் வ.உ.சி வேளாண்மை கல்லூரி மாணவிகள் சத்திரப்பட்டி கிராமத்தில் உள்ள மக்களுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த பி ஆர் ஏ என்பது மக்களுக்கு உள்ளூர் வளங்கள் மற்றும் தேவைகளை அறிதல், திட்டமிடல் மற்றும் முடிவு எடுத்தல், நிலைத் தன்மையை உறுதிப்படுத்தல், மக்களின் பங்கேற்பை ஊக்கு வித்தல், மக்களின் நம்பிக்கையை அதிகரித்தல், துல்லியமான தகவல், செலவு மற்றும் நேர குறைப்பு. உரிமை உணர்வு மற்றும் நிலையான தீர்வுகள் ஆகியவற்றை பற்றி எடுத்துரைக்கிறது.

இந்த விழிப்புணர்வை பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மூலம் ஜெ.மல்லீஸ்வரி, பா.மதுமிதா, ஜெ.மினு அனன்யா, த.மிருத்திகா, கு.முத்துலெட்சுமி, ப.முத்துலட்சுமி, நித்யஸ்ரீ நல்லமுத்து, பா.நிவேதா, ப.பிரவீணா ஆகியோர் எடுத்து நடத்தினர்.

# Rithvik Pipe

IS 4985 : 2021 IS 8537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பூச்சிக்கொல்லி மருந்துகளின் நச்சுத்தன்மை குறியீடு – விழிப்புணர்வு நிகழ்ச்சி

இராமநாதபுரம், ஜன.21

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரம், கல்லூரணி அருகே அமைந்துள்ள குள்ளம்பட்டி கிராமத்தில், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகிலுள்ள பேரையூர் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகள், ஊரக வேளாண் அனுபவ பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, விவசாயிகளுக்கான முக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.



இந்த நிகழ்ச்சியில், பூச்சிக்கொல்லி மருந்துகளின் நச்சுத்தன்மை குறியீடுகள் (Pesticide Toxicity Labels) குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. குறிப்பாக, பூச்சிக்கொல்லி மருந்து பாட்டில்களின் பின்புறத்தில் காணப்படும் முக்கோண வடிவ குறியீடுகள் மூலம் மருந்துகளின் நச்சுத்தன்மை நிலைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதையும், அந்த குறியீடு களை எவ்வாறு சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் மாணவிகள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், அதிக நச்சுத்தன்மை கொண்ட பூச்சிக்கொல்லி மருந்து களை பயன்படுத்தும் போது மனித உடல்நலத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இவ்வகை பாதிப்பு களைத் தவிர்க்கும் வகையில், பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கும் போது கையுறை (Gloves), முககவசம் (Mask), காலுறை (Shoes), நீள கை சட்டை மற்றும் நீள கால்சட்டை போன்ற பாதுகாப்பு உபகரணங்களை கட்டாயமாக பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம், பூச்சிக்கொல்லி மருந்து களை பாதுகாப்பாக பயன்படுத்துவதன் அவசியம் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மேலும் வலியுறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைந்ததுடன், பாதுகாப்பான மற்றும் பொறுப்பான வேளாண் நடைமுறைகளை ஊக்குவிக்கும் முயற்சியாக கருதப்பட்டது.

# பொங்கல் விழாவில் ஒருங்கிணைந்த விவசாய முறை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

## மாவட்ட ஆட்சியர் பாராட்டு

காஞ்சிபுரம், ஜன.21

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் அடுத்த தேவரியம்பாக்கம் கிராமத்தில் 14/01/26ல், சமத்துவத்தை வலியுறுத்தும் வகையில் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் தொன் போஸ்கோ வேளாண்மை கல்லூரி (Don Bosco College of Agriculture) மாணவர்கள் உற்சாகமாக பங்கேற்று, விவசாயம் சார்ந்த புதுமையான மாதிரிகளை காட்சிப்படுத்தினர். அதில், ஒருங்கிணைந்த விவசாய முறை (IFS) மற்றும் காட்டுப்பன்றி தாக்குதலை கட்டுப்படுத்தும் உயிரியல் விரட்டும் (Wild Boar Bio- Repellent) மாதிரி குறித்து மாவட்ட ஆட்சியருக்கும் விவசாயிகளுக்கும் விளக்கமளிக்கப்பட்டது. இந்த மாதிரி சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் பயிர்களை பாதுகாக்கும் முறைகளை எடுத்துரைத்தது.

மேலும், நானோ யூரியா மற்றும் திரவ உயிர்சார் உரங்கள் (Liquid Biofertilizers) பயன்படுத்துவதன் பயன்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. நானோ யூரியா உரம் உரச் செலவுகளை குறைத்து பயிர் வளர்ச்சியை மேம்படுத்தும் விதமும், திரவ உயிர்சார் உரங்கள் மண் வளத்தை அதிகரித்து நிலையான விவசாயத்தை ஊக்குவிக்கும் விதமும் தெளிவாக எடுதுரைக்கப்பட்டது.

தொன் போஸ்கோ வேளாண்மை கல்லூரி மாணவர்களின் இந்த முயற்சிகளை மாவட்ட ஆட்சியர் பாராட்டியதுடன், நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகளும் ஆர்வமுடன் விளக்கங்களை கேட்டறிந்து கலந்துரையாடினர். சமத்துவ பொங்கல் விழாவானது சமூக ஒற்றுமையையும், விவசாய அறிவுப் பரிமாற்றத்தையும் ஒருங்கிணைத்த ஒரு சிறப்பான நிகழ்வாக அமைந்தது. மேலும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பெற்றன. அதில் கிராம மக்கள் ஆர்வமாக பங்கேற்று மகிழ்ந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# ட்ரைக்கோகிராமா முட்டை அட்டை – விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவி


திருச்சிராப்பள்ளி, ஜன.21

ட்ரைக்கோகிராமா (Trichogramma) என்பது மிகவும் சிறிய அளவுள்ள பயனுள்ள பராசிட் பூச்சியாகும். இது தீங்கு விளை விக்கும் பூச்சிகளின் முட்டைகளில் தன் முட்டைகளை இடுவதன் மூலம் அவற்றை அழிக்கிறது. வேளாண்மையில் உயிரியல் பூச்சி மேலாண்மையில் (Biological Pest Control) ட்ரைக்கோகிராமா முட்டை அட்டைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.



## ட்ரைக்கோகிராமா முட்டை அட்டை என்றால் என்ன?

ட்ரைக்கோகிராமா முட்டை அட்டை என்பது, கோர்சைரா (Corcyra cephalonica) என்ற பூச்சியின் முட்டைகளில் ட்ரைக்கோகிராமா பராசிட் செய்யப்பட்ட நிலையில், காகித அட்டைகளாக தயாரிக்கப்பட்டதாகும். இந்த அட்டைகள் வயலில் தொங்கவிடப்படும் போது, ட்ரைக்கோகிராமா வெளியே வந்து தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் முட்டைகளை அழிக்கும்.



**கட்டுப்படுத்தப்படும் முக்கிய பூச்சிகள்**

தண்டு துளைப்பான் (Stem borer)

இலை மடக்கி பூச்சி (Leaf folder)

பழம் துளைப்பான் (Fruit borer)

காய் துளைப்பான் (Pod borer)

சோளம், கரும்பு, நெல், பருத்தி, காய்கறி பயிர்களில் வரும் முட்டை நிலை பூச்சிகள்

**பயன்படுத்தும் முறை**

ஒரு ஏக்கருக்கு பொதுவாக 8-10 முட்டை அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன.

பயிர் நடவு செய்த 20-30 நாட்களில் முதல் முறையாக வயலில் தொங்கவிட வேண்டும்.

7-10 நாட்கள் இடைவெளியில் 4-6 முறை தொடர்ந்து பயன்படுத்துவது சிறந்தது.

முட்டை அட்டைகளை நேரடி வெயிலில் வைக்காமல், செடிகளின் நடுப்பகுதியில் தொங்கவிட வேண்டும்.

**ட்ரைக்கோகிராமா முட்டை அட்டையின் நன்மைகள்**

இரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாடு குறைகிறது.

மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் பாதுகாப்பானது.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லை.

பூச்சிகளுக்கு எதிர்ப்பு சக்தி உருவாகாது.

இயற்கை வேளாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்கு (IPM) ஏற்றது.

**இந்திய அரசு மானியம்**

இந்திய அரசு, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (ஞூஊணனி) மற்றும் உயிரியல் வேளாண்மை முறைகளை ஊக்குவிக்கும் நோக்கில், ட்ரைக்கோகிராமா போன்ற உயிரியல் பூச்சி கட்டுப்பாட்டு முறைகளுக்கு மானியம் வழங்கி வருகிறது.

**மானியம் வழங்கப்படும் திட்டங்கள்**

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் (NFSM)

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் (RKVY)

ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை திட்டம் (IPM)
மாநில வேளாண் துறை திட்டங்கள்

**மானிய விவரங்கள்**

ட்ரைக்கோகிராமா முட்டை அட்டைகள் 50% முதல் 75% வரை மானியத்தில் வழங்கப்படுகின்றன. சில மாவட்டங்களில் இலவசமாக கூட விநியோகம் செய்யப்படுகிறது. மானிய விகிதம் பயிர், மாவட்டம் மற்றும் திட்டத்தின் அடிப்படையில் மாறுபடும்.

**யாருக்கு கிடைக்கும்?**

சிறு மற்றும் குறு விவசாயிகள், இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயிகள், IPM முறையை பின்பற்றும் விவசாயிகள், விவசாய குழுக்கள் / FPO உறுப்பினர்கள்.

**எங்கிருந்து பெறலாம்?**

அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையம், வட்டார வேளாண்மை அலுவலகம், உழவர் சேவை மையம், மாநில வேளாண் துறை மூலம் நடத்தப்படும் விநியோக முகாம்கள்.

**மானியத்தின் நன்மைகள்**

இரசாயன பூச்சிக்கொல்லி செலவு குறையும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

மனித உடலுக்கு பாதுகாப்பான உணவு, நிலையான விவசாயம் (Sustainable Agriculture).

மேலும் விவரங்களுக்கு **பா.சுபஸ்ரீ, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, ம.ஆர்த்தி, உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், ச.பூர்ணிமா, உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் :** baluguna 8789@gmail.com, **தொலைபேசி எண் : 99446 41459 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.**



# விளக்குப்பொறி பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு தோட்டக்கலை மாணவிகள் விளக்கம்



பெரம்பலூர், ஜன.21

பெரம்பலூர் மாவட்டம், மேத்தாலில் உள்ள விவசாயிகளுக்கு விளக்குப் பொறி பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை பற்றி திருச்சி மகளிர் தோட்டக் கலை கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். விளக்குப் பொறி என்பது பயிர்களை தாக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படும் சுற்றுச்சூழல் நட்பு கருவியாகும். இதன் மூலம் பூச்சிகளின் இனப்பெருக்கம் குறைந்து, பயிர் சேதம் கட்டுப்படுத்தப்படுகிறது.

விளக்குப் பொறி பயிர்களில் சரியான நேரத்தில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கவும் உதவுகிறது. இரசாயன பூச்சிக் கொல்லிகள் பயன்பாட்டை குறைப்பதால் மண், நீர் மற்றும் மனித ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையில் விளக்குப் பொறி ஒரு முக்கியமான, செலவுக் குறைந்த மற்றும் பாதுகாப்பான தொழில்நுட்பமாகும்.

**பயன்படுத்தும் முறைகள் :** வயலில் 3 அடி உயரத்தில் மின்விளக்கு வைத்து, அதன் கீழே பூச்சிகள் விழுந்து இறக்க நீர் நிரப்பிய பாத்திரம் அல்லது மண்ணெண்ணெய்/பூச்சிக்கொல்லி கலந்த தட்டை வைக்க வேண்டும். இது இரவு நேரங்களில் பூச்சிகளைக் கவர்ந்து அழித்து, இனப்பெருக்கத்தைத் தடுக்கும். மின்சார, சோலார், மண்ணெண்ணெய் விளக்குகள் பயன் படுத்தலாம், பொதுவாக 1 ஏக்கருக்கு 4–5 பொறிகள் தேவைப்படும்.

இந்த நிகழ்வு மேத்தாலில் உள்ள விவசாயிகளுக்கு தோட்டத்தில் ஊரக தோட்டக்கலை பணி அனுபவம் திட்டத்தின் கீழ் நான்காம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் ஆர்யா பிஜ்,கௌரி.செ, ஜெசிகா, ஜுவா.சொ, கீர்த்தனா.ச, மோனிக்கா.து, மோத்திகா.ரா, யாழினி.செ ஆகியோர் விளக்குப் பொறி பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தனர்.